Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 20
சனிக்கிழமை
16 டிசெம்பர் 2023
கார்த்... வள்...

## முச்சந்தி முரளி



"நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கிறதாம். மொட்டு ஆளுதோ வீழுதோ எண்டு பொறுத்திருந்து பாருங்கோவன்"

## சடலம் மீட்பு!

வவுனியா, டிசெ. 16
வவுனியா, சிதம்பரபுரத்தில் 39 வயதான இளம் குடும்பத்தலைவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக சிதம்பரபுரம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். தவறான முடிவு எடுத்தே அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-ஒ-18)

# மீண்டும் புலிவால்!



**கொழும்பு, டிசெம்பர் 16**

**பிரபாகரனுடன் எந்தவொரு தலைவரும் நேருக்கு நேர் போரிட்டதில்லை. ஆனால், நாம் போரை முடிவுக்குக் கொண்டுவந்து ஈழம் அமைவதைத் தடுத்தோம். போரை அடுத்த தலைவருக்கு விட்டு வைக்கவில்லை - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

11

## மீண்டும் மஹிந்த

கொழும்பு, டிசெ. 16
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாடு கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இந்த மாநாட்டிலேயே பொதுஜன பெரமுனவின் தலை

11



## மொட்டு மீண்டும் ஆளும்!

### பஸில் நேற்றுச் சூளுரை

கொழும்பு, டிசெ. 16
பொதுஜன பெரமுனக் கட்சியென்பது சிங்கம்போன்றது. எனவே, எம்மீது தாக்குதல் தொடுக்க முற்படவேண்டாம். அவ்வாறு தாக்குதல் நடத்தினால் நாமும் பதிலடி கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

11

## சீனாவின் ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி வழங்கவேண்டாம்

### இலங்கை, மாலைதீவுக்கு இந்தியா எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 16
ஜனவரி மாதம் இலங்கைக் கடலில் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ள சீனக்கப்பலுக்கு அனுமதி வழங்கக் கூடாது என இந்தியா, இலங்கைக்கும் மாலைதீவுக்கும் எச்சரித்துள்ளது.
சீனாவின் ஆய்வுக் கப்பல் இலங்கைக் கடலில் ஜனவரி மாதம் ஆய்வுகளை முன்னெடுக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே இந்தியா எச்சரிக்கை விடுத்துள்ளது.
இந்தியாவின் அழுத்தத்துக்கும் மத்தியில் சீனாவின் ஆய்வுக்

11

## டெங்குத் தாக்கம் அதிகரிப்பு மக்களே அவதானம்!!!

### மீண்டும் மீண்டும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 16
வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களில் டெங்குத் தாக்கத்தால் இரண்டு உயிரிழப்புகளும் பதிவாகியிருக்கின்றன. இவர்களில் ஒருவர் யாழ்.நகரப் பகுதியைச் சேர்ந்தவர், மற்றைய நபர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் எனவும் வடக்கு மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அண்மையில் யாழ்.

11

## காணி அளவீடு எதிர்ப்பால் பிசுபிசுப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16
கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கும் நோக்கில் அளவீடுகள் செய்வதற்கு நில அளவைத் திணைக்களம் நேற்று எடுத்த முயற்சி, அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பை அடுத்துக் கைவிடப்பட்டது.

11

## கிளிநொச்சி, முல்லையில் வெள்ளத்தால் பேரிடர்

கிளிநொச்சி, டிசெ. 16
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ந்து பெய்த கனமழை காரணமாக ஆயிரத்து 353 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 172 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
காற்றுச் சுழற்சி காரணமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்றுமுன்தினத்திலிருந்து தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதனால் அங்குள்ள குளங்கள் வான் பாயத்தொடங்கியுள்ளன. தாழ் நிலப்பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.
கிளிநொச்சி மாவட்டத்தில் 716 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 258 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 637 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 914 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-5-214)

## வடக்குக்கு வெளியே எங்களை நியமியுங்கள்

### வடக்கு மாகாணக் கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் ஆளுநரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 16
வடக்கு மாகாணத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை, இடமாற்றங்கள் வழங்கப்படாமை, அதிபர் நியமனங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் வடக்கு மாகாணக் கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை

11

## இன்று இரவிலிருந்து கனமழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் நேற்று மிகச்சிறிய அளவிலேயே மழை கிடைத்துள்ளது. எனினும் நேற்று இரவு முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக மழை கிடைக்கத் தொடங்கியுள்ளது. இன்று பகல் மிகக் குறைவானளவு மழை கிடைத்தாலும் கூட இன்று இரவு முதல் அடுத்து 3 நாள்களுக்கு வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமான மழை கிடைக்க வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

11

## இரணைமடுவின் 14 வான் கதவுகளும் நேற்றுத் திறப்பு

கிளிநொச்சி, டிசெ. 16
கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான நீர்த்தேக்கமான இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் நேற்று மு.ப. 10 மணியளவில் 34 அடியை எட்டியது. இதனையடுத்து அதன் 14 வான் கதவுகளும் 2 அடிக்கு திறந்து விடப்பட்டுள்ளன. (அ-ஒ-113)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார ரீதியில் 2024 பயங்கரமானது!

## ஐ.ம.ச. எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 16

2024ஆம் ஆண்டு பொருளாதார ரீதியில் நாட்டுக்குப் பயங்கரமான ஆண்டாக அமையப்போகின்றது. எனவே, மக்கள் ஆணை பெற்ற அரசு ஆட்சிப்பீடமேற உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'2023ஆம் ஆண்டைவிடவும் 2024ஆம் ஆண்டு படுபயங்கரமாக அமையப்போகின்றது. பொருளாதாரம் வீழ்ச்சியடைப்போகும் ஆண்டாகவும் அமையப் போகின்றது. மூவேளை உணவு உட்கொண்ட மக்கள் தற்போது இருவேளைகள்தான் உண்கின்றனர். இந்த நிலைமையும் அடுத்த ஆண்டு இல்லாமற்போகக் கூடும். எனவே, அரசு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். மக்கள் ஆணையுடன் ஆட்சியொன்றை ஏற்படுத்த சந்தர்ப்பம் வழங்கவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்பார் எனக் கூறப்பட்டது. ஆனால் என்ன நடக்கின்றது? பொருள்களின் விலைகள் எல்லாம் எகிறிவிட்டன. மக்கள் வாழமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கள்வர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். விலைமனுக் கோரல்களில் கொள்ளைகள் இடம்பெறுகின்றன. எனவே, இந்த நாட்டை மேலும் நாசமாக்காமல் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகின்றோம்' - என்றார். (ம-44)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் களமிறங்குவார்!

கொழும்பு, டிசெ. 16

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் களமிறக்கும். அவரை பின்வாங்க வைக்க இடமளிக்கமாட்டோம் - என்று அந்தக் கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெருக்கடி நிலையில் இருந்து நாட்டை மீட்கக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. சர்வதேச ஆதரவைப்பெற்ற நபரும் அவர்தான். நெருக்கடிநிலைமையைக் கையாளும் அனுபவம் அவருக்கே உள்ளது. மக்களின் மனச்சாட்சிக்கு இது தெரியும். எனவே, போலிகளை நம்பவேண்டாம். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்கான அழுத்தங்களை நாம் தொடர்ச்சியாக விடுப்போம். அவர் கட்டாயம் களமிறங்கவேண்டும்' - என்றார். (ம-44)

# கூட்டமைப்பினரே புலிகள்

## மிகிந்தலை விகாராதிபதி தம்மரத்னதேரர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 16

**சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் புலிகள் என்று குறிப்பிட்டுள்ளார் மிகிந்தலை விகாரையின் விகாராதிபதியான வலவாஹேஹுனவே தம்மரத்ன தேரர்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் அரசியல் கட்சிகளுக்கு உரித்தான பிக்கு அல்லன். இலங்கைப் பிரஜைகளுக்குரிய பிக்கு ஆவேன். மக்களுக்காகக் குரல் எழுப்பி வருகின்றேன். மஹிந்தவுக்கோ, ரணிலுக்கோ சார்பாகச் செயற்படுபவரும் அல்லன். எனக்குஎந்தவொரு கட்சியுடனும் தொடர்பில்லையாது. புலிகள் எனச் சொல்லப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன போன்ற கட்சிகளில் அரசியல் மிருகங்களே அங்கம் வகிக்கின்றன.

1948 முதல் இற்றைவரை ஒருசில குடும்பங்களே நாட்டை ஆள்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களும் குடும்பப் பின்னணியைக் கொண்டவர்கள். தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியலிலும் குடும்ப ஆதிக்கம்தான் உள்ளது' - என்றார். (ம-44)

# மருத்துவர்கள் ஓய்வு வயது 63

கொழும்பு, டிசெ. 16

அனைத்து மருத்துவர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 63ஆக அதிகரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மருத்துவர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை தொடர்பில் கடந்த ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை எதிர்த்து 176 விசேட மருத்துவ ஆலோசகர்களால் எழுத்தாணை மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் விக்கும் களுஆராச்சி ஆகிய இரு நீதிபதிகள் தலைமையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது அனைத்து மருத்துவர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 63ஆக அதிகரிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-இ)

# நாடாளுமன்ற அமர்வுக்காக நாள் ஒன்றுக்கு ஒரு கோடி

கொழும்பு, டிசெ. 16

நாடாளுமன்ற அமர்வுக்காக ஒரு நாளைக்கு ஒரு கோடிரூபா செலவிடப்படுவதாக பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

வற்வரி திருத்தம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கருஜெயசூரிய சபாநாயகராக இருந்த காலத்தில் 4.2, 4.6 மில்லியன் மட்டுமே ஒரு நாடாளுமன்ற அமர்வுக்கு செலவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி-6)

# கடல் கொந்தளிக்கும் மீனவர்கள் அவதானம்

நாட்டைச் சூழ உள்ள கடற்பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். அத்துடன் கடற்பரப்பு கொந்தளிப்பாகவும் காணப்படும் என்பதால் மீனவர்கள் கூடுதல் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்பு தொடக்கம் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான அத்துடன் அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் ஊடாக மட்டக்களப்புவரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 40 -50 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடற்பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். ஆனால் இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் - என்றுள்ளது. (ம)

# வடமாகாணத்தில் இன்றும் மழை!

கொழும்பு, டிசெ. 16

கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மாத்தளை மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலும் இன்று மழை பெய்யக்கூடும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இன்றைய வானிலை தொடர்பில் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் அநுராதபுரம்ஆகிய மாவட்டங்களில் இடையிடையே மழை பெய்யக்கூடும். நாட்டின் ஏனைய பிரதேசங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, மேல், தென், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரையிலான பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் - என்றுள்ளது. (ம)

# இளையோரின் விவசாயத்துக்கு ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, டிசெ. 16

விவசாய நடவடிக்கைகளில் இளைஞர்களை ஈர்க்கும் வகையில் அடுத்த ஆண்டுக்கான பாதீட்டில் ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

மஹிந்த அமரவீரவின் ஆலோசனைக்கமைய ஆயிரம் இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்குத் தலா ஒரு மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது.

விவசாய அபிவிருத்தித் திணைக்களத்துக்காக ஒதுக்கப்பட்ட 3 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியிலேயே இந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்தவருடம் நெல், சோளம், மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு ஆகிய பயிர்ச்செய்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது என்றும் விவசாய அமைச்சு தெரிவித்தது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநோயாளிகளுக்கு மேலும் மனஅழுத்தம்

## ம.உ. ஆணைக்குழு சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ.16**
**இலங்கையில் மனநோயாளிகள் மிகக் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். மன நோயாளிகளைக் கையாள்வதிலுள்ள சவால்களை எதிர்கொள்ள இலங்கையில் 'புதிய மனநல மருத்துவ சட்டம்' ஒன்று தேவை என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
மனநோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையின் போதான சில நடவடிக்கைகள் மற்றும் வசதிகள் இல்லாமை 'சித்திரவதைக்கு ஒப்பாகும்'. மன நோயாளிகளின் மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படுவது ஆழ்ந்த கவலையளிக்கிறது.
இலங்கையின் தேசிய மன நல நிறுவனத்தில் ஊழியர்களின் தவறான நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. கண்காணிப்புக் கமராக்கள் இல்லாத இடங்களில் ஊழியர்கள் நோயாளிகளை அடிப்பது போன்ற முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் நோயாளி ஒருவர் உயிரிழந்துமுள்ளார். மனநோயாளிகளை கையாள்வதில் பல சவால்கள் இருக்கும் சூழலில் இலங்கையில் 'புதிய மனநல மருத்துவ சட்டம்' ஒன்று தேவை. அந்தச் சட்டம் சர்வதேச தரத்துக்கு அமைவாக இருக்கவேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

# சிறை அதிகாரிகள் 19 பேர் பதவியுயர்வு

கொழும்பு, டிசெ. 16
சிறைச்சாலை அதிகாரிகள் 19 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை ஆணையாளர் காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
சிறைத்துறையில் வெற்றிடமாகவுள்ள தலைமை சிறைச்சாலை அதிகாரி பணியிடங்களை நிரப்ப கடந்த மாதம் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)


# இலங்கையில் முதலீடு; டென்மார்க் ஆயத்தம்!

கொழும்பு, டிசெ. 16
டென்மார்க்கின் முதலீட்டாளர்கள் பலர் எரிசக்தி துறை, ஆழ்கடல் மீன்பிடி, இயந்திரப் படகு, உற்பத்தி மற்றும் ஏனைய திட்டங்களில் முதலீடு செய்யத் தயாராக இருக்கின்றனர் என்று டென்மார்க் தூதுவர் ப்ரெடி ஸ்வெயின் தெரிவித்துள்ளார்.
பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் டென்மார்க் தூதுவர் ப்ரெடி ஸ்வெயினுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது. இதன்போதே இருதரப்பு உறவுகள் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (ச-இ)



# யானைகள் உயிரிழப்பு இந்த ஆண்டில் உயர்வு

கொழும்பு, டிசெ. 16
இலங்கை வரலாற்றில் இந்த வருடத்தில் அதிக யானைகள் உயிரிழந்துள்ளன என்று வன உயிரிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கடந்த ஆண்டு 439 யானைகள் உயிரிழந்த நிலையில், இந்த ஆண்டின் டிசெம்பர் மாதம் வரையில் 449 யானைகள் உயிரிழந்துள்ளன. இந்தக் காலப் பகுதிக்குள் பதிவான சம்பவங்களில் 81 யானைகள் துப்பாக்கிச்சூடு காரணமாக உயிரிழந்துள்ளன என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# பொலிஸார் மீது கத்திக்குத்து!

கொழும்பு, டிசெ. 16
இரவு நேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு பொலிஸார்மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் பொரளையில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.
கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்ற சந்தேகநபரைப் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தி கைது செய்துள்ளனர். சந்தேகநபர் 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# டிஜிற்றல் உற்பத்திக்கு வற்வரி அறவிடப்படா!

## ஜனாதிபதி தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ. 16**
**வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் டிஜிற்றல் உற்பத்திகளுக்கு வற்வரி அறவிடப்படமாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். எனினும் உள்நாட்டில் விற்பனை செய்யப்படும் டிஜிற்றல் உற்பத்திகளுக்கு வற் அறவிடப்படும் எனவும் தெரிவித்தார்.** (ரி-6)

# புதினம் தெரியுமோ?

**வடக்கு மாகாணசபை கொண்டு வந்த உருப்படியான திட்டங்களில 'அம்மாச்சி' சாப்பாட்டுக் கடையளுக்குத்தான் முதலிடம். நல்ல சத்தான, தரமான சாப்பாடுகளை மலிவா எல்லாரும் வாங்கக் கூடியதா இருக்குது. அதோட சில பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்தவைக்கும் இந்த அம்மாச்சி சாப்பாட்டுக் கடையள் வாழ்வாதாரமா இருக்குது. பெரிய சாப்பாட்டுக்கடையளுக்கே போட்டியா, எப்பவும் பரபரப்பா அம்மாச்சி சாப்பாட்டுக்கடையள் இருக்கும். சனத்துக்கும், சாப்பாட்டுக்கும் அங்க குறையே இருக்காது. உள்ளூரில இருக்கிறவை மட்டுமில்லை தூர இடங்களில இருந்து வாறவையும் கூடுதலா அம்மாச்சிக்குத்தான் போறவை.**

**தூரப்பயணம் செய்யிறவை இப்பிடி இடையில இறங்கி சாப்பாட்டுக் கடையளுக்குப் போறதுக்கு மூண்டு காரணம் இருக்கும். கொஞ்சம் ஆறுதல் எடுக்கிறது. சாப்பிடுறது. ஒண்டுக்கு ரண்டுக்குப் போறது. இந்த மூண்டையும் ஒரே இடத்தில பூர்த்தி செய்யிறதுதான் தூர இடப் பயணம் செய்யிற ஆக்களின்ர நோக்கம். அப்பிடி வடக்கில இருந்து தெற்குக்கு போய்வாற ஆக்கள் நிக்கிற இடங்களில முறிகண்டியும், வவுனியாவும் கட்டாயம் இருக்கும். வவுனியாவில பஸ் ஸ்ராண்டுக்குப் பக்கத்திலயே அம்மாச்சி இருக்கிறதால, பஸ்ஸால வந்து இறங்கிறவையும் அம்மாச்சிக்குத்தான் ஓடி வருவினம். இப்பிடி ஒரு நல்ல இடத்தில இருக்கிற வவுனியா அம்மாச்சியில சாப்பாடெல்லாம் சொல்லி வேலையில்லை. அந்தளவு தரமும், ருசியும். ஆனால் அப்பிடித் தரமான சாப்பாடு இருந்தும் கொஞ்சக்காலமா அங்க தூர இடத்துக்குப் பயணம் செய்யிறவை அம்மாச்சியில நிக்காமல், ரவுனுக்குள்ள உள்ள வேற கடையளுக்குத்தான் போகினம்.**

**அப்பிடி அவைக்கு அம்மாச்சியோட என்ன கோபம்? வேற ஒண்டுமில்லை. வவுனியா அம்மாச்சியில சாப்பாட்டில காட்டுற அக்கறையை அங்க உள்ள பாத்ரூம்ல காட்டாமல் விட்டிட்டினம். அங்க உள்ள பாத்ரூமுக்குப் போனால் சத்தி எடுக்காமல் வெளியில வர ஏலாது எண்ட நிலைமை. குளிக்கப்போய் சேறு பூசினமாதிரி, சாப்பிடப் போய் சத்தி எடுக்க ஆர் விரும்புவினம்? அதால மெல்லமெல்ல அம்மாச்சிக்குப் போறதை வெளியாக்கள் குறைக்கத் தொடங்கிட்டினம். தேவையில்லாத ஆணியளையெல்லாம் பிடுங்கிற பி.எச்.ஐ .மார், இதுகளை ஒருக்கா எட்டிப்பார்த்தால் என்னவாம்? நல்லா இயங்கிற 'அம்மாச்சி'க்கு பாத்ரூம் சரியில்லை எண்டதால சனம் போகாமல் விடுற நிலைமையை உரியவை கவனமெடுத்து மாத்த முயற்சிக்கோணும்.**

-பட்சி
padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### யாழ்ப்பாணத்தில்
# பன்றி நெல்லை அகற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய நிலங்களில், பன்றி நெல்லை அடையாளம் கண்டு அவற்றை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று யாழ். மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அஞ்ஞனாதேவி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- எதிர்வரும் 25ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பன்றி நெல் அடையாளம் காணப்பட்டு அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன், அடுத்தடுத்த நாட்களில் மழையுடனான காலநிலை நீடிக்கவுள்ளதால் விவசாயிகள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் - என்றார். (ம-125)

# புன்னைநீராவிப் பகுதி வெள்ளத்தால் பேரிடர்!



**யாழ்ப்பாணம், டிசெ. 16**

**சீரற்ற காலநிலை காரணமாக, கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட புன்னை நீராவி கிராம அலுவலர் பிரிவின் பல பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி பேரிடர் ஏற்பட்டுள்ளது.**

தற்பொழுது பெய்த கடும்மழை காரணமாக வெள்ளம், சுண்டிக்குளம் சந்தியூடாக கல்லாறு சுண்டிக்குளம் கடற்கரை செல்லும் பிரதான வீதியை மேவிப் பாய்வதால் இந்த வெள்ளப் பேரிடர் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனவே வெள்ளம் வடிந்தோடுவதற்கு உரிய வழிவகைகளை ஏற்படுத்தி பொதுமக்களின் இயல்பான போக்குவரத்துக்கு ஏற்பாடுகளைச் செய்து தருமாறு அந்தப் பகுதி பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-113)



# மாணவர்களின் மாதிரிச் சந்தை

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பிரதேசத்தின் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் மாதிரிச்சந்தை பாடசாலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை நடைபெற்றது. ஆரம்பப்பிரிவு மாணவர்களிடம் சந்தையிலோ, கடைகளிலோ பொருள்களை வாங்கி விற்கும் திறனை ஏற்படுத்தவும், கணித அறிவை மேம்படுத்தவும், பொருள்களின் பணப்பெறுமதியைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பாகவும் இந்த நிகழ்வு அமைந்தது. (ரி-27)

# மன்னாருடன் தொடர்பற்றோரை கொண்ட நிர்வாகக் கட்டமைப்பு!

*மீனவக்கூட்டுறவுச் சமாசம் சுட்டிக்காட்டு*

மன்னார், டிசெ.16

மாவட்ட மீனவ கட்டமைப்பை உருவாக்க 22பேர் கொண்ட உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் மன்னாருடன் தொடர்பு இல்லாதவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட மீனவக் கூட்டுறவுச் சமாசத்தின் செயலர் ஜனாப் ஆலம் தெரிவித்தார்.

மன்னார் பிரஜைகள் குழு, மன்னார் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடியது. இதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராமிய அமைப்புகளின் புதிய நிர்வாகக் கட்டமைப்புத் தெரிவு நாளை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தெரிவு செய்யப்படவிருக்கும் இந்த அமைப்பு ஊடாகவே மாவட்டத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பு மாவட்ட மீனவர்களைக் கொண்ட திறம்படச் செயற்படக்கூடிய அமைப்பாக அமைய வேண்டும்-என்றார். (ஓ-60)



முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் முல்லைத்தீவு விவசாயத் திணைக்களமும் இணைந்து நடத்தும், விவசாய மேன்மை விருது வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ரி-75)

# பிள்ளையார் கதை

யாழ்ப்பாணம், டிசெ. 16

வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீ மிந்திரன் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கடந்த 28ஆம் திகதிமுதல் பிள்ளையார் கதை உற்சவம் இடம்பெற்றுவரும் நிலையில் கணபதி ஹோமம் இன்று சனிக்கிழமை 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ரி-100)

# கண்காட்சி திங்களன்று

கொடிகாமம், டிசெ. 16

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் விவசாய உணவுத் தொழில்நுட்பக் கைத்தொழில் கண்காட்சி பாடசாலை வளாகத்தில் அதிபர் திருமதி தேவரதி சுதேஸ்கரன் தலைமையில் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாணத் திட்டமிடல் பிரதிப் பிரதம செயலாளர் ம.கிருபாசுதன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் த.ஜோன்குயின்ரஸ், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், ஐ.நா. உணவு விவசாய நிறுவனத்தின் களத்திட்ட இணைப்பாளர் அ.வாகீசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி-159)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கடகம்:** திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும், வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடி நாட்டையும் கெடுக்கும்

பணமென்றால் பிணம் மட்டுமல்ல ரணில் அரசாங்கமும் வாயை அகலத்திறக்கும். என்ன செய்தாலும் பரவாயில்லை, யார் எக்கேடு கெட்டாலும் கவலையில்லை, பணம் மட்டும் வந்தால் போதும் என்ற நிலையில் தான் இந்த அரசாங்கத்தின் அத்தனை நகர்வுகளும் இருக்கின்றன. முற்றுமுழுதாக முதலாளித்துவக் கொள்கையில் இயங்கும் நாடுகளில் கூட இத்தனை தூரம் மக்கள் நலன் பின்தள்ளப்பட்டு, பணமீட்டல் மட்டுமே முன்னிலைப்படுத்தப்படுமா? என்பது கேள்விக்குறியே. அந்தளவுக்கு ரணில் அரசாங்கம் மக்களிடம் உள்ள பணத்தைக் கறக்கும் கைங்கரியங்களை ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்த்திக்கொண்டேயிருக்கிறது. இவற்றில் வரி அதிகரிப்பு, பொருள் விலை உயர்வு போன்றன வெளித்தெரியும் வகையிலான வசூலிப்புகள். ஆனால் கண்ணுக்குப் புலனாகாதவகையில் இந்தக் காசுகறப்புகள் பலவழிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அதிலொன்று தான் மதுபானசாலைகள் திறந்திருக்கும் நேரத்தை நீட்டித்தல்.

இதுவரைகாலமும் இரவு 9 மணிக்குப் பின்னர் சகல மதுபானசாலைகளும் பூட்டப்பட்டுவிடும். ஆனால் அந்த நேரத்தை ரணில் அரசாங்கம் டிசெம்பர் 9 ஆம் திகதிமுதல் அதிகரிக்கும் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. வெளிநாட்டு மதுபான சில்லறை விற்பனை உரிமத்தின் கீழ் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரையும், சுற்றுலாச் சபையால் அங்கீகரிக்கப்படாத, வளாகத்தில் மது அருந்துவதற்கான மதுபான விற்பனை நிலையங்கள் காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரையும், சுற்றுலாச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட, வளாகத்தில் மது அருந்துவதற்கான மதுபான விற்பனை நிலையங்கள் மு.ப 10 மணி முதல் மதியம் 12 மணி வரையும், சுற்றுலாச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்கள் (3 நட்சத்திரங்கள் மற்றும் அதற்கு மேல் உள்ள ஹோட்டல்கள்) மு.ப 10 மணி முதல் அதிகாலை 2 மணி வரையும் இயங்கும் நிலை உருவாகியுள்ளது. இதனூடாக சுற்றுலாவிகளை அதிகளவு கவர்ந்து, அதிக அந்நியச் செலாவணியைப் பெறமுடியும் என்று அரசாங்கம் சொல்லிக்கொள்கிறது. அரசாங்கம் சொல்வதில் ஒருபக்கம் நியாயம் இருக்கவே செய்கின்றது. ஆனால் இதன் மறுபக்கத்தில் அதிபயங்கரமான எதிர்விளைவுகளும் ஏற்படப்போகின்றன. டயானா கமகே போன்ற வேற்றுக்கிரகத்தில் வசிக்க வேண்டிய சிலரே இந்தத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். நாட்டின் பெரும்பாலானோரின் எதிர்ப்புக்கு மத்தியில் மதுபானசாலைகளை அதிகநேரம் திறந்தே தீருவோம் என்று ரணில் அரசாங்கம் விடாப்பிடியாக நிற்கின்றது.

'வரப்புயர நீர் உயரும்' என்ற விதி எல்லாவற்றுக்குமே பொதுமைப்பாடாக இருப்பதைப் போல, இந்த மதுபான நேர நீட்டிப்புக்கும் பொருந்தும். எவ்வளவு அதிக நேரம் மதுபானசாலைகள் திறந்திருக்கப் போகின்றனவோ அந்தளவுக்கு அங்கு கூட்டமும் அலைமோதப் போகின்றது. இதுவரை 9 மணிக்குப் பிறகு மதுச்சாலைகள் திறந்திருக்காது என்பதால், கொஞ்சமேனும் அடங்கியிருந்த மதுப்பிரியர்கள் இனிமேல் நள்ளிரவு தாண்டியும் போதையோடு அலையப்போகிறார்கள். இந்த மதுப்பிரியர்களில் அரசாங்கம் நினைப்பது போல சுற்றுலாவிகளை விடவும், உள்ளூர்வாசிகளே எண்ணிக்கையில் பலமடங்காக இருப்பர். இவர்கள் பகல்முழுதும் பாடுபட்டு உழைத்துச் சேர்த்த அத்தனையையும் இரவிரவாகக் குடித்து அழிக்கப் போகிறார்கள். மதுபான விற்பனையால் அரசின் கஜானா நிறையத் தொடங்கும். ஆனால் நாட்டில் உள்ள பெரும்பாலானோரின் வீடுகளில் பசியும், ஏழ்மையும் தாண்டவமாடத் தொடங்கும். குடியால் ஏற்படும் நோய்களும், இதர விளைவுகளும் நாட்டின் தொழிலாளர் படையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். குடியால் உண்டான நோய்களுக்கு சிகிச்சை செய்யப் பெருந்தொகைப் பணத்தை அரசாங்கம் தேடவேண்டியிருக்கும். இந்தத் தொகை மதுவிற்பனையால் கிடைத்த வருமானத்தை விடவும் பலமடங்கு அதிகமாக இருக்கும். அதைவிட தொழிலாளர் படையில் வீழ்ச்சி ஏற்படுவதால், நாட்டின் உள்ளூர் உற்பத்திகளும் தேக்கமடையும். உற்பத்திகள் வீழ்ச்சியுறும் சமநேரத்தில் மருத்துவத்துறைக்கும் பெருமளவு நிதியைச் செலவிடவேண்டிய கட்டாயம் ஏற்படும் போது, நாட்டில் இப்போது இருப்பதை விடவும் மிகப்பாரதூரமான பொருளாதார நெருக்கடி உருவாகும். அப்போது எத்தனை நாணயநிதியங்கள் வந்தாலும் இலங்கையை மீட்கமுடியாது என்பதே யதார்த்தம். இதை ஏன் ரணில் அரசாங்கம் உணரமறுக்கின்றது?




# அடுத்த ஆறு மாதம் சட்டங்கள் இறுகும்!

**கொழும்பு, டிசெ. 16**

**நாட்டில் அடுத்த ஆறு மாதங்கள் சட்டங்கள் கடுமையாக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. இதனால், அடுத்த ஆறு மாதங்களுக்கு நாட்டில் சட்டத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதை எதிர்க்கும் எந்தத் தரப்புக்கும் நானோ அல்லது பொலிஸ் திணைக்களமோ அடிபணியப்போவதில்லை. அடுத்த ஆறு மாதங்களுக்குக் குற்றச்செயல்களைக் குறைப்பதே இதன் நோக்கம் - என்றார். (ம)

## இலங்கை இளநீருக்கு எகிறுகின்றது மவுசு!

கொழும்பு, டிசெ. 16

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இளநீருக்கு அதிகளவான கேள்வி இருப்பதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

மாதாந்தம் 200 இளநீர்க் கொள்கலன்கள் அந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிலையில், முதன்முறையாக தோட்டப் பயிராக செய்கை பண்ணப்பட்ட இளநீரை ஏற்றுமதி சார்ந்த பயிராகப்பயிரிட விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு நேற்றுமுன்தினம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி முருதவெலமேல்பிரதேசத்தை இலங்கையின் முதலாவது இளநீர்ச் செய்கை மாதிரிக் கிராமமாக அபிவிருத்தி செய்யும் பணி விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம)

## யானைக்கால் நோய் இலங்கையில் தீவிரம்

கொழும்பு, டிசெ. 16

இலங்கையின் சில பகுதிகளில் யானைக்கால் நோய் மீண்டும் தீவிரமாகப் பரவி வருகின்றது. குறிப்பாக புத்தளம் மாவட்டத்தில் யானைக்கால் நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதாரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கிராமப்புறங்களில் இந்நோய் பரவும் அபாயம் அதிகம் என சுகாதார பூச்சியியல் அதிகாரி புத்திக சமில தெரிவித்துள்ளார். ஜப்பான்ஜபரா, சல்வேனியா போன்ற தாவரங்கள் பெருகியதே இதற்கு முக்கியமான காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ருமேனியா நாட்டுக்கு அனுப்புவதாக மோசடி

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு அதிகாரி ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 16

ருமேனியாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, பெண்ணொருவரிடம் பண மோசடியில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீதெனியாவைச் சேர்ந்த பெண்ணிடம் அவர் இவ்வாறு 5 இலட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்டுள்ளார். சந்தேகநபர் மொறட்டுவையைச் சேர்ந்தவர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-6)

## இசைவு மீன்பிடிப்படகுகள் இலங்கைக்கு அன்பளிப்பு!

கொழும்பு, டிசெ. 16

ஐ.நா. உணவுமற்றும்விவசாய நிறுவனம் இலங்கைச் சூழலுக்கு இசைவான மீன்பிடிப் படகுகளையும், மீன் காட்சிப் படுத்தும் வண்டிகளையும் அன்பளிப்புச்செய்துள்ளது. இந்தப்படகுகள் புயல், காற்று, சூறாவளி போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு அளிக்கக் கூடியவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

## நாளை

17.12.2023

ஞாயிற்றுக்கிழமை

மார்கழி - 01

சுபநேரம் : 09.22 - 10.52

ராகுகாலம் : 04.52 - 06.22

## நாளொரு நல்வார்த்தை

இலக்கு இல்லாத மனிதன்,
சுக்கான் இல்லாத
கப்பலைப் போன்றவன்.

– தோமஸ் கார்லைல் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஒளி விழா நிகழ்வு அதிபர் ஆ.லோகேஸ்வரன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் அருட்பணி அந்தோனிதாஸ் டலிமா பிரதம விருந்தினராகவும், அருட்சகோதரி றதினி, ஜி.ஜெயக்குமார் மற்றும் யோசுவா சதீஸ் கிறிஸ்பஸ் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் ஒளி விழாவுக்கான சஞ்சிகை வெளியீடும் இடம்பெற்றது. (ரி-75)



மட்டக்களப்பு மாவட்ட 'மார்ச் 12' இயக்கத்தின் தூய அரசியலுக்கான திட்டமிடல் கலந்துரையாடல் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. கேட்போர் கூடத்தில் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சபா.சிவயோகநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ரி-100)

## டெங்குக் கட்டுப்பாடு விழிப்புணர்வுக் கூட்டம்


ஆனைக்கோட்டை கிராம அலுவலகர் பிரிவில் டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதார உத்தியோகத்தர், ஆனைக்கோட்டை உயரப்புலம் கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேசசபை உத்தியோகத்தர் மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-66)






முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான் குளம் அ.த.க. பாடசாலையில் முதற்றடவையாக தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் சு.யதிப்சனைக் கௌரவிக்கும் நிகழ்வு குறித்த பாடசாலையில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ரி-13)



சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களிலுள்ள 40 மாற்றுத்திறனாளிகளுக்கு உலருணவுப் பொதிகள் செண்பகம் அறக்கட்டளையின் அனுசரணையில் அண்மையில் வழங்கப்பட்டன. (ரி-75)



இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் வடமாகாண காரியாலயத்தின் ஏற்பாட்டில் தேசிய அறுவடைக்குப்பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் அனுசரணையில் தெரிவு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான பொதியிடல் மற்றும் சுட்டியிடல் தொடர்பான பயிற்சிநெறி மாந்தை மேற்குப் பிரதேசசெயலர் பிரிவின் அடம்பன் விதாதா வள நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ரி-75)

## டெங்கு விழிப்புணர்வும் சிரமதானப் பணியும்



கிளிநொச்சி, பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில், இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையினரால் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வும் சிரமதானப் பணியும் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில் இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர்சபை தொண்டர்களுக்குப் பிரமந்தனாறு பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வ.சிந்துஜன் டெங்கு நோய் தொடர்பிலான விளக்கத்தையும் வழங்கினார். (ரி-159-66)



கிளிநொச்சி மாவட்டச் செயலக சிற்றுண்டிச்சாலையில் உயிர்வாயு தயாரிப்புச் செயன்முறைத் திட்ட நடவடிக்கைகள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கான தொழில்நுட்ப வழிகாட்டல் விழிப்புணர்வுச் செயலமர்வு மாவட்டச் செயலக வளாகத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ரி-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 12 . 1927



மறைவு
14 . 12 . 2023

## வேலாயுதபிள்ளை பொன்னம்மா

அறுகுவெளி, தனங்கிளப்பை பிறப்பிடமாகவும், தாவளை, இயற்றாளை மற்றும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. வேலாயுதபிள்ளை பொன்னம்மா கடந்த (14.12.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வள்ளிபுரம் தம்பதியினரின் அன்பு மகளும் சங்கரப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சுப்பிரமணியத்தின் சகோதரியும், சிதம்பரபிள்ளையின் உடன்பிறவா சகோதரியும், செல்லம்மா, இலங்கை திலகேஸ்வரி, பாலசுப்பிரமணியம், செல்வராசா, சிவசுப்பிரமணியம், அருந்தவமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சின்னத்துரை, சண்முகநாதன், லோகேஸ்வரி, கலாவதி, விஜயநாயகி, சூரியகுமார் ஆகியோரின் மாமியாரும், சுதா, சுதாகரன், கிருபாகரன், சுதாவதி, காலஞ்சென்ற சிவாகரன், தயாகரன், சுபா, கெங்காதரன், சுமதி, காண்டீபன், கயேந்தினி, கார்த்தி, நிரஞ்சன், நிருபா, குசலன், நிருஜன், சாருகா, மதுஜன், தனுஷன், அபர்னா, அபரிஷன், நறுமுகை, சுப்பிரமணியம், சுரேகா, சிவராணி, ரமேஸ், மனோகரி, பாமினி, குமார், அபிராமி, கோகிலாதேவி, சிரோமி, மாசீலன், சுகந்தினி, ஹிந்துஷா, கேசவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை வீரப்பளைவீதி, பலாலி கிழக்கில் அமைந்துள்ள சின்னத்துரை அவர்களின் இல்லத்தில் முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பலாலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் மாறு கோட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு : 077 275 9184
077 262 7214

தகவல்:
குடும்பத்தினர்.

(CR (41319) S-1

## திருகோணமலையில் மக்கள் போராட்டம்

திருகோணமலை, டிசெ. 16

வாழ்நிலங்களை, கிராமங்களை இல்லா தொழித்து மக்களை வெளியேற்றும் திருகோணமலை இந்திய பொருளாதார வலய வேலைத் திட்டங்களைத் தோற்கடிப்போம் எனும் தொனிப்பொருளில் இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் திருகோணமலை நகரில் மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் போராட்டம் நடைபெறவுள்ளது.

(ஒ-66)

THE ROYAL COLLEGE OF JAFFNA
3 மாதங்களில் இலகுவான முறையில்
ஆங்கிலத்தில் கதைக்கப்பயில
ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்
குபேரன் கட்டடமாடி, பிரான்பற்று வீதி, சங்கானை
Tel : 077 675 1649
(25 வருட அனுபவம்)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை
இந்தியன் செலக்ஷனின்
நத்தார் மற்றும் புதுவருட ஜவுளிப் பண்டிகை
ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்
பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப், பாட்டி புரொக், சேட், ரீ சேட், சோட்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்




விஷேட விலைக்கழிவு
ரெடிமேட் சல்வார் 750 /=
டொப் 500/=
கையிருப்பு உள்ளவரை மட்டுமே
காலம்: 16.12.2023 முதல் 31 ஆம் திகதி வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Water Filtter இல் ஒரு மாபெரும் புரட்சி இதுவரை கண்டிராத
MEGA OFFER Rs. 10,000




உங்கள் வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ நீங்கள் பயன்படுத்தும் நீர் மஞ்சள் அல்லது உவர்த்தன்மை கொண்டுள்ளதா அதற்கான சுத்திகரிப்பிற்கான தீர்வினை தேடுகின்றீர்களா எம்மிடத்தில் மிக மிக குறைந்த விலையில்




076 666 5267 / 077 057 3684
YARL SMART (Pvt) Ltd
341,K.K.S Road , Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி
- ✓18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (Bio Data) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

Whatsapp : 077 756 3781

jenyjude77@yahoo.com


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29-11-1947

மறைவு 22-11-2017



அமரர் திருமதி

### கிருஷ்ணசுவாமி தவமலர்

*திதி : பூர்வபக்க சதுர்த்தி (16.12.2023)*

"இவ் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானடைந்து ஆண்டு ஆறு ஆனாலும் ஆறாது அம்மா உங்கள் பிரிவுத்துயர்"

39/A புலவனார் வீதி,
கல்வியங்காடு

*என்றும் நினைவில்*
குடும்பத்தினர்

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 03 . 10 . 1932

ஈழத்து சிவனடியில் 25 . 11 . 2014



காரைநகர் ஆலடியைச் சேர்ந்த

### கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

(இளைப்பாறிய OA, வவுனியா கச்சேரி)

*திதி : 16.12.2023*

ஒன்பது ஆண்டு நகர்ந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது உங்கள் முகம் ஐயா!
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு என்றுமே அகலாது ஐயா!
எப்போதும் எம் சிந்தனைகளில் வலம் வந்து கொண்டு
- இருக்கிறீர்கள் ஐயா!
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் எங்கள் வாழ்வின்
ஒவ்வொரு நகர்வுகளில் நீங்கள் வாழ்ந்து கொண்டே
- இருப்பீர்கள் ஐயா!
நீங்கள் மறையவில்லை என்றென்றும்
எங்களுடன் வாழ்கின்றீர்கள் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய காரைநகர் மனற்காட்டு முத்துமாரி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆலடி
காரைநகர்

(CS 27355) AK.1

*என்றென்றும் உங்கள் நினைவலைகளுடன்*
மனைவி, பிள்ளைகள்

# இம்முறை ஐவருக்கு சிவத்தமிழ் விருது

யாழ்ப்பாணம், டிசெ. 16


தெல்லிப்பழை, ஸ்ரீதுர்க்காதேவி ஆலயப் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 99ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை விரிவுரையாளர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, மருத்துவக் கலாநிதி அருளானந்தம், இளைப்பாறிய விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், நாதஸ்வர வித்துவான் இ.கேதீஸ்வரன், இளைப்பாறிய அதிபர் மு.அருணாசலம் ஆகிய ஐந்து பெருந்தகைகள் 'சிவத்தமிழ் விருது' வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ரி-66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 03 1945

மறைவு 12 12 2023



அமரர்.

### திரு. கனகரத்தினம் செவ்வந்திநாதன்

(விவசாய ஆராய்ச்சி அலுவலர்)

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கை பிறப்பிடமாகவும், தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கனகரத்தினம் செவ்வந்திநாதன் அவர்கள் 12.12.2023 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்ற கனகரத்தினம் பரிமளகாந்தி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஸ்ரீமதிதேவியின் அன்புக்கணவரும், மீனாருளினி (இலண்டன்), கோகுலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவரூபன் (இலண்டன்), தர்சிகா (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும், சிவானி, கீத்தன், கவின், ஆகியோரின் பாசமிகு பேரனும், திருமணி, தவமணி, சட்டநாதன், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, ரகுநாதன், மகேந்திரநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரனும், அருள்அன்னதேவி, தயாநிதி, ஸ்ரீகுமார், கிரிஜா, காலஞ்சென்றவர்களான செல்வராஜா, நாகேஷ், ஜெயலஷ்மி, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 16.12.2023 சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று மதியம் 2.00 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

தொ.இல: 077 343 6262
078 643 0847

பூநகரியில்

# சோலர் மின்னுற்பத்திக்கு அமைச்சரவை அனுமதி

பூநகரியில் 700 மெகாவாற்ஸ் சோலர் மின் உற்பத்தி செய்வதற்கு அவுஸ்திரேலிய நிறுவனத்துக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

வடக்கு மாகாணத்திலேயே பெரும் அபிவிருத்தித் திட்டமாக இந்தத் திட்டம் அமையும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். 1.72 பில்லியன் முதலீட்டில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்கு ஆயிரத்து 80 ஏக்கர் களப்பு நிலம் 35 வருடக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-6)


## Holy Cross Nursing School

In Service to the Sick

உங்கள் பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்திற்காக

மருத்துவத்துறையில் சேவையாற்றும் கனவை நிறைவேற்ற வடக்கின் மிகச்சிறந்த அரச அங்கீகாரம் பெற்ற இரு தனியார் பாடசாலைகளில் ஒன்று

17 தை 2024 முதல் புதிய பிரிவுகள் ஆரம்பம்

மருத்துவமனையுடன் (Holy Cross Hospital Jaffna) இணைந்த ஒரே ஒரு பாடசாலை (தொழில் சார் பயிற்சிகள் வழங்கப்படும்)

உயர்ந்த ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பான சூழல் திருச்சிலுவை கன்னியர் அருட்சகோதரிகளால் நடத்தப்படும் தாதியர் பாடசாலை

- Care Giver (பராமரிப்பாளர்) NVQ 3, NVQ4
- Nursing Assistant (தாதியர் உதவியாளர்) NVQ3 & 4
- Diploma In Nursing NVQ 6

தகுதியான ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்

Admin Branch, Digital Class Rooms, Skill Labs Facilities, Library, IT Lab, Hostel Accommodation, Study Hall

26500 சதுர அடி (Square Feet) பிரமாண்ட கட்டட அமைப்பு

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

076 493 1009

nursingschoolhc@gmail.com

Holy Cross, Beach Road, Jaffna


Holy Cross Nursing School (Jaffna)



REGISTERED: TVEC P25/0024

REGISTERED: PHSRC/OMI/137


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவிலிருந்து மீளவும் முட்டைகள்

கொழும்பு, டிசெ. 16
இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முட்டை உற்பத்தியாளர்களுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

முட்டை விலையைக் குறைக்குமாறு விடுத்த கோரிக்கையை உற்பத்தியாளர்கள் நிராகரித்துள்ளனர். முட்டை ஒன்றின் விலையை 55 ரூபாவுக்கு கீழ் குறைக்கமுடியாது என்று முட்டை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் முட்டை இறக்குமதியை அரசாங்கம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



# அக்கராயன் ஆற்றில் மணலகழ்வு தீவிரம்!

**கிளிநொச்சி, டிசெ. 16**

**கிளிநொச்சி அக்கராயன் ஆற்றுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்கின்றது என்றும், பெருமளவு மணல் வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றது என்றும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இரு ஆண்டுகளுக்கு முன்னர் அக்கராயன் ஆற்றில் 3 கிலோமீற்றர் வரையான தூரம் துப்புரவு செய்யப்பட்டு பெருமளவு மணல் ஆற்றின் கரையில் குவிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தனியான கூட்டங்களிலும் பெறுமதியான விலையில் மணலை விற்பனை செய்வது என முடிவெடுக்கப்பட்டது. அக்கராயன் பொது அமைப்புகள் மணலை தமது பொதுத் தேவைக்கும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்த நிலையில் தற்போது தனியார் நிறுவனங்கள் மிகக் குறைந்த விலையில் மணலை அள்ளிச் செல்கின்றன.

அத்துடன், கனரக வாகனங்கள் ஆற்றங்கரையில் மணல் அகழ்வில் ஈடுபடமுடியாத என்ற சட்டம் உள்ள போதிலும், கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்வதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டு குவிக்கப்பட்டுள்ள மணல் மிகக் குறைந்த விலையில் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது - என்றனர். (ரி-13)



# கஜமுத்துகளுடன் நால்வர் கைது

கொழும்பு, டிசெ. 16
இரண்டு கோடி ரூபா பெறுமதியான 4 கஜமுத்துகளை விற்பனை செய்ய முயன்ற நால்வரை சீதுவ பகுதியில் வைத்து பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். (ச-இ)

# பொலிஸார் கைப்பற்றிய ஹெரோய்ன் எரித்தழிப்பு

கொழும்பு, டிசெ. 16
2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட 107 கிலோ ஹெரோயின் போதைப்பொருள் புத்தளத்திலுள்ள சிமெந்துத் தொழிற்சாலை ஆலை உலையில் எரித்து அழிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட நீதிவான் மிஹில் சிரந்த சத்துருசிங்கவின் முன்னிலையில் இந்த ஹெரோய்ன்போதைப்பொருள் அழிக்கப்பட்டது.

அழிக்கப்பட்ட ஹெரோய்ன் போதைப்பொருள் 321கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

LANKA Sathosa

# சில பொருள்கள் விலை சதொசாவில் குறைப்பு!

கொழும்பு, டிசெ. 16
அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த விலை குறைப்பு நேற்றுமுதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பால்மாவின் விலை 10 ரூபாவாலும், இறக்குமதி செய்யப்படும் ரின்மீன் 55 ரூபாவாலும் உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு கிலோ 15 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஒரு கிலோ கிராம் சிவப்பு நாட்டு அரிசி 8 ரூபாவாலும் வெள்ளை நாட்டு அரிசி 7 ரூபாவாலும் கொண்டைக்கடலை 5 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன என்று லங்கா சதொச நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# ஊழல் மோசடி அதிகாரிகளை கண்டறிந்தால் சட்டம் பாயும்

## ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 16
அரச வருமானம் சேகரிக்கும் அதிகாரிகளிடையே ஊழல் மோசடிமிக்க அதிகாரிகளைக் கண்டறிந்து கண்காணிக்க எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆஷூ மாரசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் நிதிக்கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கொள்கையை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது. தற்போது சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாம் கட்டக் கடன் உதவியும் எமக்குக் கிடைக்க இருக்கிறது. கடந்த காலங்களில் அரச வருமானங்களைச் சேகரிக்கும் அதிகாரிகள் தங்களின் பொறுப்பை முறையாகச் செய்யத் தவறியதாலேயே அரச வருமானம் குறைவடைந்திருந்தது.

அதிகரிக்கப்பட்டிருக்கும் வரி வருமானங்களை முறையாகச் சேர்க்கும் பொறுப்பு அரச அதிகாரிகளுக்கே இருக்கிறது. அதனைச் செய்யத் தவறும் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். - என்றார். (ச-இ)

# பெண் தகராறு; ஒருவர் கொலை

கொழும்பு, டிசெ. 16
ஹங்வெல்ல, தும்மோதரப் பகுதியில் பேருந்துச் சாரதி ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. இரண்டு பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர், கொழும்பு செல்லும் ரயிலில் தப்பிச் செல்லும்போது மீகொட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பெண்ணொருவருக்காக இருவருக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடு கொலையில் முடிந்துள்ளது என்று சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# சகல பண்ணைகளும் பதிவு

கொழும்பு, டிசெ. 16
நாட்டிலுள்ள சகல கால்நடைப் பண்ணைகளையும் எதிர்வரும் ஜனவரி மாதம் பதிவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது 2 இலட்சத்து 90 ஆயிரத்து 592 கால்நடைப் பண்ணைகள் காணப்படுகின்றன. அவற்றில் 58 ஆயிரத்து 137 பண்ணைகள் மாத்திரமே கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு பதிவுசெய்யப்பட்டுள்ள கால்நடைப் பண்ணைகளில் பெரும்பாலானவை நாளொன்றுக்கு 100 லீற்றருக்கும் குறைவான பால் உற்பத்தியை மேற்கொள்ளும் பண்ணைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# வீட்டுக்குள் துப்பாக்கிச்சூடு

## மூவர் படுகாயம்


கொழும்பு, டிசெ. 16
வீடொன்றுக்குள் நுழைந்த இனந்தெரியாதோர் அங்கு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ராகம, வல்பொல பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் 17 வயதுடைய இளைஞன் உள்ளிட்ட மூவர் படுகாயமடைந்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பு; சிங்களவர்கள் போராட்டம்

## அம்பிட்டிய தேரரும் பங்கேற்பு பொலிஸாரும் உடந்தை



மட்டக்களப்பு, டிசெ. 16

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பை நேரில் ஆராயச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எதிராக, திம்புலாகல, திவுலபத்தனை கிராமங்களில் உள்ள சிங்களக் குடியேற்றவாசிகள் குழு வளமண்டிப் பாலத்தை மறித்து எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரைப் பயணிக்க அனுமதிக்காததால், சுமார் ஒன்றரை மணி நேரம் அவர் வளமண்டி பாலத்துக்கு அருகில் வாகனத்துக்கு உள்ளேயே இருக்க நேரிட்டது. சிங்களக் குடியேற்றவாசிகளின் கூச்சல்களுக்கு மத்தியில் அவர் திரும்பிச் சென்றார்.

அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மற்றும் பொல்கஹ அரவ பிரதேசத்தைச் சேர்ந்த தேரர் உட்பட பெருந்தொகையான சிங்கள மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவம் நடந்த உடனேயே அங்கு விரைந்த கரடியனாறு பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற உறுப்பினரைத் திருப்பி அனுப்புவதிலேயே குறியாகவும் இருந்தனர்.

இந்த அரசியல்வாதி இனவாதத்தைத் தூண்டி, தமது பயிர்ச்செய்கை நிலத்தை தடை செய்ய வந்துள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்தினர். (அ-ஒ-இ)

# பெரமுனவினர் உண்ண வைக்கோலும் புற்களும்

கொழும்பு, டிசெ. 16

பொதுஜன பெரமுனக் கட்சியின் கூட்டத்தில் பங்கேற்பவர்களுக்கு உண்பதற்கென நாட்டில் சில பகுதிகளில் வைக்கோலும், புற்களும் வைக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பான வீடியோ மற்றும் ஒளிப்படங்களால் சமூக வலைத்தளங்களில் நேற்றுப் பரபரப்பான நிலை இருந்ததை அவதானிக்க முடிந்தது.

பொதுஜன பெரமுனக் கட்சியின் 2ஆவது சம்மேளனம் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்றது. இதனையொட்டி நாட்டின் பல பகுதிகளிலும் கொடிக் கம்பங்களில் பெரமுனவின் கொடி காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறு அமைக்கப்பட்டிருந்த கொடிக் கம்பங்களில் நேற்றுமுன்தினம் இரவும், நேற்றுக் காலையும் வைக்கோலும், புற்களும் தொங்க விடப்பட்டிருந் தன. பெரமுனவின் கூட்டத்தில் பங்கேற்பவர்களுக்கே இது என வலைத்தளங்களில் பதிவுகளும் இடப்பட்டிருந்தன. (ம-44)

# விளையாட்டுப்போட்டி

சாவகச்சேரி பிரதேச சபையின் சனசமூக நிலையங்களுக்கான விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வரணி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையிலான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கயிறு இழுத்தல் மற்றும் கரப்பந்தாட்ட போட்டிகள் இடம் பெறவுள்ளன. (ஒ-159)


## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 10 . 1942



மறைவு 15 . 12 . 2023

### செல்லையா தருமராஜா (குட்டி மாமா)

திருநெல்வேலி கிழக்கினைப் பிறப்பிடமாகவும் முத்திரைச் சந்தியினை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டி மாமா என அன்பாக அழைக்கப்படும் தருமராஜா நேற்று (15.12.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா கண்ணம்மா தம்பதி யரின் கனிஸ்ட புதல்வனும், காலஞ்சென்ற சிங்கராஜா பூரணம் மற்றும் குலவீரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகநாதன் (நடன முருகன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பண்டாரக்குளத்தில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27378) A-1



## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 04 . 1965



இறப்பு 15 . 12 . 2023

### மயில்வாகனம் மகாராசா (மது)

மட்டக்களப்பு கிரானை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகாராசா (மது) (ஜோதி இன்டஸ்ரிமில் உரிமையாளரும், முன்னாள் The Halo Trust உறுப்பினரும்) அவர்கள் நேற்று (15.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் இராசநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயசிறிராணியின் (ஜெயா) பாசமிகு கணவரும், மோகனவர்மன், பிரியவர்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, சற்குணராசா மற்றும் விக்னேஸ்வரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 6688 244

(CS 27376) A-1



## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23 . 10 . 1993



இறப்பு 29 . 11 . 2019

### அமரர் செல்வி ம. கோபினா

திதி : சதுர்த்தி (16.12.2023)

விண்ணகத்தில் ஒளிரும் உங்கள் மின்மினியின் அன்பு மடல்!
பெற்றோரே! உறவுகளே!
" நானிருக்கும் விண்ணகத்தில் நலமோடு வாழுகின்றேன்
நீவிர் புவிதனிலே நலமோ ? நான் ஏங்குகின்றேன்
வரமாய் எனை வளர்த்து வளமாக நினைத்திருந்தீர்
கனவாய்ப் போனதென்று கலக்கமது கொள்ளாதீர்
காவலாய் நானிருப்பேன் கண்ணீரை நானறிவேன்
எங்கள் இறை சம்மதத்தை சொல்லியதால் சொல்லுகின்றேன்
மறுபிறப்பில் உங்கள் மடிதனிலே தவழ்ந்திடுவேன்
கடமையெல்லாம் செய்து களிப்போடு வாழ்ந்திருப்பேன்
அதுவரையில் நீங்கள் ஆறுதல் கொண்டிடுவீர்."
அன்புடன் உங்களுயிர் – கோபினா

குமரபுரம்,
பரந்தன்

தகவல் :
குடும்பத்தினர்
மகேந்திரன் (அப்பா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று...

'நாளை மறுதினம் 18ஆம் திகதி அன்று
மீண்டும் ஒரு காற்றுச்சுழற்சி இலங்
கைக்கு தென்கிழக்கே வங்காள விரிகு
டாவில் தோன்றுவதற்கு வாய்ப்புள்ளது.
இதனால் எதிர்வரும் 21ஆம் திகதி முதல்
வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகா
ணத்தின் பல பகுதிகளுக்கு மீண்டும்
கனமழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்
படுகின்றது' எனவும் அவர் மேலும் குறிப்
பிட்டார். (அ-ஒ-5)

## மீண்டும்...

பொதுஜன பெரமுனக் கட்சியின் 2
ஆவது சம்மேளனத்தில் கலந்து
கொண்டு உரையாற்றுகையிலேயே
அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2005ஆம் ஆண்டு நாம் ஆட்சியைப்
பொறுப்பேற்றபோதும் சேறுபூசினர்.
ஆனால் நாடு பிளவுபட்டு ஈழம் அமைவ
தைத் தடுக்குமாறு மட்டுமே மக்கள் எம்
மிடம் கோரினர். பிரபாகரனுடன் நேருக்கு
நேர் போரிட தலைவர்களுக்கு முடியா
மல் இருந்தது. சில தலைவர்கள், பிரபா
கரனுக்கு ஆயுதங்களைக்கூட வழங்கி
னர். அந்த ஆயுதங்களைப் பயன்படுத்தி
இராணுவத்தினரை பிரபாகரன் கொன்
றார். அப்பாவி மக்களைக் கொன்றார்.
அவ்வாறு இருந்த போரை அடுத்த தலை
வருக்கு நாம் விட்டுவைக்கவில்லை.
தமிழ், சிங்களம், முஸ்லிம் என அனைத்து
மக்களுக்கும் சமாதானத்துடன் வாழக்
கூடிய சூழலை உருவாக்கி, இந்நாட்டில்
சமாதானத்தை ஏற்படுத்தினோம்.
போர்க் காலத்தில் குழந்தைகளாக இருந்
தவர்களே இன்று இளைஞர்களாக உள்
ளனர். அவர்களுக்கு அன்று நிலவிய
சூழ்நிலை தெரியாது. அவர்களின் பெற்
றோர் சுதந்திரமாகத் தொழிலுக்குச் செல்ல
முடியாமல் இருந்தது. காலையில் சென்
றால் மாலையில் வீடு திரும்புவோமா
என்பது சந்தேகமாகவே இருந்தது.
இதனை மறந்துவிட்டனர். இளைஞர்க
ளைக் குற்றஞ்சாட்டமுடியாது. அவர்
களை ஏமாற்றி, தமது அரசியல் தேவை
களை நிறைவேற்ற முற்படுபவர்களும்
உள்ளனர். இவர்கள்தான் சமாதா
னத்தை ஏற்படுத்திய இராணுவத்தின
ரைக்கூட ஏளனப்படுத்துகின்றனர். சர்வ
தேசப் பிடிக்குள் சிக்கியுள்ளனர். அத
னால்தான் அன்றுபோலவே இன்றும்
எமது நாட்டுக்கான அழுத்தங்கள் குறை
யவில்லை எனக் கூறுகின்றோம்.
மக்கள் முன்னிலையில் எம்மை குற்ற
வாளியாக்க வானுக்கும், பூமிக்கும் முடிச்
சுப் போடுகின்றனர். போருக்கு மத்தியி
லும் நாம் பொருளாதார வளர்ச்சியை
ஏற்படுத்தினோம். 2014 இல் பொருளா
தார வளர்ச்சி 6.8 வீதமாக இருந்தது.
2015 இல் மாற்றத்தைக் கோரினர்.
ஆனால் பொருளாதாரம் மறைப் பெறு
மதிக்கு வந்தது.
நாம் கொரோனாச் சவாலை எதிர்கொண்
டோம். பொருளாதாரச் சவாலையும்
எதிர்கொண்டோம். அவ்வாறான சூழ்நிலை
யிலேயே மக்கள் தூண்டப்பட்டனர்.
அதன் பின்னர் நடந்தவை தெரியும்.
சிலர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு
முன்னரே ஆடைகளைத் தைத்துக்
கொண்டு உள்ளனர். ஆனால் சவாலை
ஏற்பதற்கு அவர்கள் தயார் இல்லை.
இப்படியான தலைவர்களுக்கு நாட்டை
வழங்கக்கூடாது.
**குறுகிய காலத்துக்குள் இந்நாட்டில் புரட்**
சியை ஏற்படுத்திய கட்சியே பொதுஜன
பெரமுனக் கட்சியாகும். அடுத்த தேர்த
லில் எமது முகாமை பலமான சக்தியாக
திகழும். இந்நாட்டைப் பிளவுபடுத்த இட
மளிக்கமாட்டோம். எதிர்காலச் சவால்
களை எதிர்கொள்ளக்கூடிய கட்சியும்
பொதுஜன பெரமுனக் கட்சியாகும்.
அரகலய ஊடாக அழியவிருந்த நாடு,
மக்கள் வழங்கிய ஆணையால்தான்
காப்பாற்றப்பட்டது. எமது கரங்கள் குருதி
படிந்த கரங்கள் அல்ல. நாட்டுக்குத்
தேவையான புதிய பயணம் ஆரம்பமா
கும். புதிய பயணத்துக்கான அனைத்து
இன மக்களையும் அழைக்கின்றேன் -
என்றார். (அ-ஒ-44)

## வடக்குக்கு...

தனித்தனியாகச் சந்தித்துக் கோரிக்கை
களைச் சமர்ப்பித்தனர்.
யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண
ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்
தில் நேற்று முற்பகல் இந்தச் சந்திப்புகள்
இடம்பெற்றன. இது தொடர்பில் வடக்கு
மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு விடுத்
துள்ள ஊடக அறிக்கையில்;
புதிய அதிபர் நியமனத்தால், இதுவரை
பதில் கடமை ஆற்றியவர்கள் பாதிப்புக்
குள்ளகியுள்ளதாகவும், கடினமான
காலப்பகுதியில் பாடசாலைச் சமூகத்தை
கட்டியெழுப்ப பெரும் முயற்சிகளை மேற்
கொண்டதாகவும் வட மாகாணக் கடமை
நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தினர்
ஆளுநரிடம் தெரிவித்தனர். போட்டிப்
பரீட்சையூடாகத் தெரிவு செய்யப்பட்ட அதி
பர்களுக்கான நியமனக் கடிதங்கள்
வழங்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த
வாரம் அவர்கள் கடமைகளைப் பொறுப்
பேற்கவுள்ளனர். இதனால் பல வருடங்
களாக பதில் கடமை புரிந்த அதிபர்கள்,
உள ரீதியாகவும், சமூக ரீதியாகவும்
பாதிக்கப்படுவதாக அவர்கள் கூறினர்.
இந்நிலையில் ஏனைய மாகாணங்களில்
நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்குத் தங்
களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமா
றும் வடக்கு மாகாணக் கடமை நிறை
வேற்று அதிபர்கள் சங்கத்தினர் கோரிக்கை
முன்வைத்தனர்.
விடயங்களைக் கேட்டறிந்த வடக்கு
மாகாண ஆளுநர், கோரிக்கைகளைப்
பரிசீலிப்பதாகவும், தேவை ஏற்படின்
ஜனாதிபதியின் கவனத்துக்கும் விடயங்
களைக் கொண்டு செல்வதாகவும் தெரி
வித்தார்.
இதேவேளை - வடக்கு மாகாணத்தில்
உயர்தர வகுப்புகளுக்கான ஆசிரியர்
பற்றாக்குறை காணப்படுவதாகவும், சில
ஆசிரியர்களின் இடமாற்றங்களில் சிக்கல்
காணப்படுவதாகவும் இலங்கை ஆசிரி
யர் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆளுந
ரிடம் தெரிவித்தனர். அத்துடன் பாடசா
லைகளில் காணப்படும் அபாயகரமான
கட்டடங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்
பட்டுள்ள நடவடிக்கைகள், மாணவர்க
ளுக்கான போஷாக்குத் திட்டம், தொண்
டர் ஆசிரியர் நியமனம் உள்ளிட்ட விட
யங்கள் தொடர்பில் ஆளுநரால் மேற்
கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து
இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உறுப்பி
னர்கள் கேள்வி எழுப்பினர்.
பாடசாலைகளில் காணப்படும் அபாயக



ரமான கட்டடங்கள் தொடர்பில் தரவுகள்
சேகரிக்கப்படுவதாகவும், ஒரு சில கட்ட
டங்களுக்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ளதாக
வும் இதன்போது வடக்கு மாகாணக் கல்வி
அமைச்சின் செயலர் பற்றிக் டிறஞ்சன்
தெரிவித்தார். மாகாணத்தில் உள்ள
உயர்தர வகுப்புகளுக்கான ஆசிரியர்
கள் தவிர, ஏனைய ஆசிரியர்களின்
எண்ணிக்கை மேலதிகமாகவே காணப்
படுவதாகவும், ஆளுநரின் பணிப்பு
ரைக்கு அமைய, இடமாற்றக் கொள்கை
நடைமுறைப்படுத்தப்படுவதாகவும்
அவர் தெரிவித்தார்.
ஆசிரியர் இடமாற்றத்தில் எவ்வித பாரபட்
சமும் தேவையில்லை எனவும், இடமாற்
றக் கொள்கை முழுமையாக நடைமு
றைப்படுத்தவேண்டும் எனவும் இதன்
போது ஆளுநர் தெரிவித்தார். இந்த
விடயம் குறித்து கல்வித்துறைசார் அதி
காரிகளுக்கு அறிவிக்குமாறும், வழங்
கப்படும் பணிப்புரைகளைச் செயற்படுத்
தாத அதிகாரிகளுக்கு எதிராக நடவ
டிக்கை எடுக்குமாறும், மாகாணக் கல்விச்
செயலருக்கு, வடக்கு மாகாண ஆளுநர்
பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அறிவித்தார்.
அத்துடன் மாணவர்களுக்கான
போஷாக்குத் திட்ட முன்மொழிவுகள் மத்
திய கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்
ளதாகவும், அனுமதி கிடைத்த உடன்
அந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்
படும் எனவும் அவர் கூறினார். அத்து
டன் சில பிரச்சினைகள் நீண்ட நாட்களா
கத் தீர்க்கப்படாமல் இருப்பதால் விரை
வில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்
பட்டு வருவதாகவும் வடக்கு மாகாண
ஆளுநர் இதன்போது தெரிவித்தார் -
என்றுள்ளது. (அ-ஒ-27)

## மீண்டும்...

வராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த
ராஜபக்ச மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்
ளார். (அ-ஒ-இ)

## டெங்குத்...

நகரப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர்
டெங்குத் தாக்கத்தால் உயிரிழந்திருந்
தார். அவர் இந்த மாதம் 5ஆம் திகதி
தனியார் மருத்துவமனையொன்றுக்குச்
சென்று சிகிச்சைகள் பெற்றாலும் குருதிப்
பரிசோதனையை மேற்கொண்டிருக்க
வில்லை. அவர் அங்கு குருதிப் பரிசோ
தனை மேற்கொண்டிருந்தால் டெங்கு
நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்
திருக்கமுடியும். அந்தப் பெண்மணி 6
ஆம் திகதி நெடுந்தூரம் பயணித்து
கொழும்புக்குச் சென்றுள்ளார். மீண்டும்
நோய்வாய்ப்பட்ட நிலையில் 7 ஆம் திகதி
தனியார் மருத்துவமனையொன்றில்
குருதிப் பரிசோதனை மேற்கொண்ட
போது டெங்குநோயால் கடுமையாகப்
பாதிக்கப்பட்டிருந்தார் என்பது தெரியவந்
தது. அன்றும் அவர் மருத்துவமனைக்
குச் செல்லாத நிலையில் மறுநாள் 8
ஆம் திகதி கொழும்பு தேசிய மருத்துவம
னையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்
பட்டுள்ளார். இருப்பினும் அடுத்தநாள்
அவரது நோய்நிலை கடுமையாகியதன்
காரணமாக மருத்துவமனையில் சேர்க்
கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.
தற்போதைய காலப்பகுதியில் ஒருவருக்
குக் காய்ச்சல் ஏற்படும் போது மிகவும்
அவதானமாகச் செயற்படவேண்டும்.
காய்ச்சல் ஏற்படும் போது தகுதி வாய்ந்த
ஒரு மருத்துவரை நாடி அல்லது அருகி
லுள்ள மருத்துவமனைக்குச் சென்று குரு
திப் பரிசோதனை செய்து டெங்கு இல்லை
என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள
வேண்டும் - என்றார். (அ-ஒ-66)

## மொட்டு...


அடுத்த தேர்தலில் நாமே வெற்றிபெறு
வோம். எமது கட்சி தலைமையில் ஆட்சி
மலரும் - இவ்வாறு பொதுஜன பெர
முனக் கட்சியின் நிறுவுனரான முன்
னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச சூளு
ரைத்துள்ளார்.
பொதுஜன பெரமுனக் கட்சியின் 2
ஆவது தேசிய சம்மேளனக் கூட்டத்தில்
கலந்துகொண்டு உரையாற்றுகையில்
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அடுத்து என்ன தேர்தல் நடத்தப்பட்டா
லும் அதில் பொதுஜன பெரமுனக் கட்
சியே வெற்றிபெறும். ஏற்கனவே நடந்த
தேர்தல்களிலும் வெற்றிநடைபோட்
டோம். அந்தப் புகழ் எல்லாம் கட்சி ஆதர
வாளர்களையே சென்றடையவேண்டும்.
வெற்றியின் முழு உரிமையும் கட்சி ஆத
ரவாளர்களையே சாரும்.
இந்த நாட்டில் இரு தடவைகள் மரண
ப்பீதி ஏற்பட்டது. புலிகளுடனான போர்க்
காலம் முதல் சந்தர்ப்பம். கொரோனாப்
பெருந்தொற்று இரண்டாவது சந்தர்ப்
பம். இந்த இரு சந்தர்ப்பங்களின்போ
தும் மஹிந்த ராஜபக்ச தலைமையி
லான அரசே நாட்டு மக்களைப் பாதுகாத்
தது. இந்நாட்டில் மஹிந்த யுகத்திலேயே
பொருளாதார புரட்சியும் ஏற்பட்டது. உட்
கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்
டன. கிராமங்கள்வரை அபிவிருத்தித்
திட்டங்கள் சென்றடைந்தன.
அடுத்து என்ன என்று எல்லோரும் கேட்
கின்றனர். அடுத்து எந்தத் தேர்தல் நடத்
தப்பட்டாலும் அதில் பொதுஜன பெர
முனக் கட்சியை வெற்றிபெறவைப்போம்.
அதற்கான நடவடிக்கைகள் நிச்சயம்
மேற்கொள்ளப்படும். நாம் எதற்கும் தயார்.
பொதுஜன பெரமுனக் கட்சி தலைமை
யில் ஆட்சியொன்றை அமைக்க அணி
திரள்வோம்.
வீதியில் செல்லும் நாய்மீது கல்வீச்சுத்
தாக்குதல் நடத்தினால், நாய் குரைத்து
விட்டு வேகமாக ஓடிவிடும். ஆனால் சிங்
கத்தை நோக்கில் கல்வீச்சு தாக்குதல்
நடத்தினால். சிங்கம் நின்று, திரும்பிப்
பார்க்கும். அதுபோலவே எம்மீது தாக்கு
தல் நடத்த வரவேண்டாம். நாமும் பார்த்
துக்கொள்வோம் - என்றார். (அ-ஒ-44)

## சீனாவின்...

கப்பல் கடந்த மாதம் இலங்கைக் கடற்ப
ரப்புக்குள் நுழைந்து ஆய்வுகளை மேற்
கொண்டிருந்த நிலையில், இந்தியா இவ்
வாறு குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-6)

## காணி...

காணியை வழங்கமுடியாது எனவும் கடி
தம் எழுதி கையொப்பமிட்டு மக்கள் வழங்
கினர். இந்நிலையில் நில அளவை
திணைக்களத்தினர் அங்கிருந்து திரும்
பிச் சென்றனர். (அ-ஒ-20-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர் தொடரும்!

## சர்வதேச அழுத்தங்களுக்கு அஞ்சோம்
## இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகு தெரிவிப்பு

**டெல்அவிவ், டிசெ. 16**

**சர்வதேச அளவில் இருந்து போர் நிறுத்தத்துக்கான அழுத்தம் அதிகரித்தாலும், காஸாவில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து போரிடும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.**

இஸ்ரேல் - ஹமாஸ் மாறிமாறித் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதில் அப்பாவிப் பொதுமக்கள் தங்களது இன்னுயிரை இழந்து வருகின்றனர். அப்பாவி மக்களின் உயிரைக்காக்க காஸாவில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி ஐ.நா. பொதுச் சபையில் அண்மையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியி லேயே மேற்படி தெரிவித்துள்ளார் நெத்தன்யாகு.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நாங்கள் கடைசிவரை போராடுவோம். இதற்குமேல் பேச எதுவுமில்லை. போர் நிறுத்தத்துக்குச் சர்வதேச அளவில் அழுத்தம் கொடுத்தாலும் காஸாவில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து சண்டையிடும் என்பதை வலியுடன் பதிவு செய்கிறேன். யாராலும் எங்களைத் தடுக்கமுடியாது. வெற்றியை நோக்கி இறுதி வரை நாங்கள் செல்வோம். அதைவிட எங்களுக்குப் பெரிது எதுவும் கிடையாது' - என்றார். முன்னதாக, காஸாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களால் சர்வதேச ஆதரவை இஸ்ரேல் இழந்து வருகின்றது என்றும், போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் உடன்பட வேண்டும் என்றும் அமெரிக்க அதிபர் பைடன் வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

**மின்சார கட்டணத்தை குறைக்க விரும்புபவர்களுக்கு**

சீனா (China) மற்றும் இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட சூரிய விளக்குகள் (Solar Lights) தெருவுக்கு மற்றும் வீட்டுத் தோட்டத்திற்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பொருத்தியும் தரப்படும்.

- Lead Acid Battery அல்லது LiFePO4 (லித்தியம்) பற்றியை தெரிவு செய்யலாம். நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



**ஆர்க் . என் . கம்பனி**

- 150, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9, வீதி, முறுகண்டி. 070 191 3571
- A9, வீதி, யாழ்ஸன் சந்தி, யாழ்கவி. 021 228 2020



Hotline: 071 535 7799 / 071 973 9917

# தோட்டக்கிணற்றிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 16

கோப்பாய் மத்தியிலுள்ள தோட்டக்கிணற்றிலிருந்து இளைஞரது சடலம் நேற்று மீட்கப்பட்டது. கோப்பாய் மத்தியைச் சேர்ந்த கதிர்காமநாதன் நிரோசன் (வயது-29) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 13ஆம் திகதி 4 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற நிலையில் காணாமற் போயுள்ளார். இளைஞனை உறவினர்கள் தேடி வந்த நிலையில் தோட்டக் கிணற்றில் இருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது.

அவரது சடலம் மீதான இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-26-27)

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ (v) குடும்ப 1978 இல் பிறந்த B.Sc அரச உத்தியோக திருமணமாகாத மணமகனுக்கு நற்குணமுள்ள படித்த திருமணமாகாத மணமகள் தேவை

தொடர்பு: 076 667 8996

**பெண் வேலையாள் தேவை**

பருத்தித்துறை அல்வாய் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு வீட்டு வேலை பார்ப்பதற்கும் 3 வயது குழந்தையை பராமரிப்பதற்கும். தங்கிநின்று வேலை செய்யக்கூடிய வேலையாள் தேவை.
சம்பளம் 30,000 - பேசித்தீர்மானிக்கலாம்

077 078 4411

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 . 10 . 1938 | 14 . 12 . 2023 |

## மாணிக்கர் தாமோதரம்பிள்ளை

தாவடியினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கர் தாமோதரம்பிள்ளை 14.12.2023 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கர்-லட்சுமிப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா-அன்னம்மா தம்பதியினரின் மருமகனும், தனலட்சுமியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா, சீவரத்தினம், சுப்பிரமணியம், பரஞ்சோதி, வேலாயுதபிள்ளை, சரஸ்வதி, பூமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும், வாசுகி, தேவகி, கவிதா, சபேஷன், சுமதி, சுகந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயச்சந்திரன், கருணாகரன், திலீபன், சாந்தி, சிவகுமார், கெங்கா ஆகியோரின் மாமனாரும், அச்சுதன், கம்ஸன், காவியா, டிதுஷன், றதுஷன், சந்தியா, ஜெய்டன், கருணேஷ், காவியன், கபிஷன், சித்திராங்கன், மதுராங்கன், ஆதிரை, தினோஷா, கயல்விழி ஆகியோரின் அன்புப்பேரனும், நிலாவின் பூட்டனும், வரலட்சுமி, நாமகள், கஜேந்திரவரதன், ராஜேந்திரவரதன், ரவீந்திரவரதன், மோகன்ராஜ் ஆகியோரின் மைத்துனரும், வசந்தி, பிரபா, சயந்தி, மதி, சிவபாலன், சபாநாதன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 656 7374
077 670 1485

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27377) S-1

**காணி விற்பனைக்குண்டு**

யாழ். நாயன்மார்கட்டு சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 930 8363
077 545 3785

**வேலையாள் தேவை**

கிளிநொச்சியிலுள்ள மாட்டு பண்ணைக்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய அனுபவம் உள்ள ஆண் / பெண் வேலையாள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 538 1642

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 22 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- 20 அடிப்பாதையுடன்
- சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
- நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
- நன்னீர் ஊற்று நிலம்
- தரகர் தேவையில்லை.
- உரிய அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ள முடியும்.
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 077 468 3354
076 755 8606

(CS 27360) S-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org